
# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 12 | 4 Pages | 13.08.2023 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 12 | 4 பக்கங்கள் | 13.08.2023 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## இன்ஸ்டா லைவில் கொலை.. போஸ்னியாவை அதிர வைத்த பயங்கரம்



ஐரோப்பா, ஆக. 13

ஐரோப்பாவின் தென்கிழக்கு பகுதியில் உள்ள ஒரு நாடு போஸ்னியா ஹெர்ச்கோவினா. அந்நாட்டின் வடகிழக்கில் உள்ளது க்ரடகாக் (Gradacac) நகரம். இங்கு வசிப்பவர் நெர்மின் சுலெமனோவிக் (Nermin Sulejmanovic). இவர் ஒரு உடற்பயிற்சியாளர். இவர் மீது போதை பொருள் கடத்தல் மற்றும் காவல்துறை அதிகாரியை தாக்கியது என பல வழக்குகள் உள்ளன. நேற்று காலை சமூக வலைதளமான இன்ஸ்டாகிராமில் உள்ள தனது கணக்கில், நெர்மின் "இன்று ஒரு கொலையை நேரில் காண்பீர்கள்" என குறிப்பிட்டு ஒரு வீடியோ பதிவை நேரலை செய்ய தொடங்கினார். இதனை பார்த்த பலரும் அதிர்ச்சியடைந்து, அடுத்து என்ன நடக்குமோ என்பதை நேரலை வீடியோவில் பார்த்துக் கொண்டிருந்தனர். இவ்வாறு அனைவரும்பார்த்துக்கொண்டுஇருக்கும்போதேஅவர்ஒருதுப்பாக்கியை எடுத்தார். இத்துப்பாக்கியை ஒரு பெண்ணின் நெற்றி பகுதியில் வைத்து நெர்மின் சுட்டார். தகவலறிந்து காவல்துறையினர் அவரை தேடி அவர் இருக்குமிடத்தை கண்டறிந்து அவரை கைது செய்ய விரைந்தனர். அவர்களிடம் இருந்து நெர்மின் தப்பித்து ஓடினார். தப்பிக்கும் வழியில் மேலும் ஒரு ஆணையும் அந்த ஆணின் மகனையும் சுட்டு கொன்றார். அதனையும் வீடியோவாக பதிவிட்டார். தான் காவல்துறையிடம் சிக்காமல் ஓடி வரும் போது, வழியில் இருவரை சுட்டதாக அதனை வெளிப்படையாக கூறினார். கடைசியில் காவலர்கள் அவரை நெருங்கும் முன்பு நெர்மின் தன்னைத்தானே சுட்டுக் கொண்டு தற்கொலைக்கு முயன்றார். காவல் துறையினர் அவரை நெருங்கிய போது, அவர் உயிரிழந்துவிட்டார். சுமார் 12,000 பேர் நெர்மின் வெளியிட்ட இந்த வீடியோவை நேரலையில் பார்த்தனர். அதில் 126 பேர் இந்த வீடியோவை 'லைக்' செய்துள்ளனர். இன்ஸ்டாகிராம் நிறுவனம் இந்த வீடியோவை உடனே நீக்கியது. ஆனாலும், இந்த கொடூர சம்பவத்தை ஆதரித்து இன்ஸ்டாகிராமில் கருத்துக்கள் தெரிவித்தவர்கள் மீது வழக்கு பதிவு செய்ய, காவல்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது. "இந்த சம்பவத்தை ஐ.நா. வன்மையாக கண்டிக்கிறது. பெண்கள் மீது நடைபெற்ற இத்தகைய வன்முறைகள் போஸ்னியாவில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்றாலும் இந்த சம்பவம் பெண்களை மிகவும் அச்சுறுத்தும் விதமாக உள்ளது. அதிகாரத்தில் உள்ளவர்கள் இது போன்ற சம்பவங்கள் இனிமேல் நடக்காமல் பார்த்து கொள்ள வேண்டும்," என போஸ்னியாவில் உள்ள ஐ.நா.விற்கான குடியுரிமை ஒருங்கிணைப்பாளரான இங்க்ரிட் மெக்டொனால்ட் வலியுறுத்தியுள்ளார்.

## ரஷியாவில் அரசு ஊழியர்கள் ஐபோன் பயன்படுத்த தடை




ரஷ்யா, ஆக. 13

உலகின் முன்னணி செல்போன் நிறுவனமான அமெரிக்காவை சேர்ந்த ஆப்பிள் நிறுவனத்தால் தயாரிக்கப்படுபவை ஐபோன் மற்றும் ஐபேடு. ரஷியாவிலும் ஐபோன் விற்பனை செய்யப்பட்டு வந்தது. ரஷியர்களில் பலரும் ஐபோன் மற்றும் ஐபேடு சாதனங்களை மிகவும் விரும்பி பயன் படுத்தி வருகின்றனர். கடந்த 2022 பிப்ரவரியில் ரஷியா அண்டை நாடான உக்ரைனை ஆக்ரமித்தது. இதனை எதிர்த்து அமெரிக்கா உட்பட மேற்கத்திய நாடுகளின் உதவியுடன் உக்ரைன் போரிட்டு வருகிறது. உக்ரைன் ஆக்ரமிப்பை அடுத்து கடந்த 2022 மார்ச் மாதம் ஆப்பிள் நிறுவனம் ரஷியாவிலிருந்து வெளியேறியதுடன் விற்பனையையும் நிறுத்தியது. எனினும், வேறு நாடுகளிலிருந்து ரஷியாவிற்கு இறக்குமதி செய்யப்பட்ட ஐபோன் 14 உள்பட பல மாடல்களை ரஷியர்கள் வாங்கி பயனபடுத்தி வந்தனர். அமெரிக்காவின் ஒரு உளவு நடவடிக்கையின் விளைவாக ரஷியாவினரால் பயன்படுத்தப்படும் பல ஆயிரக்கணக்கான ஆப்பிள் நிறுவன சாதனங்கள் பாதுகாப்பை இழந்து விட்டதாக ரஷியாவின் முக்கிய உள்நாட்டு பாதுகாப்பு சேவை அமைப்பான எஃப்.எஸ்.பி. (FSB) 2 மாதங்களுக்கு முன் குற்றம் சாட்டியிருந்தது. ஆப்பிள் நிறுவனமும், அமெரிக்க தேசிய பாதுகாப்பு முகமையும் இணைந்து இதனை செய்ததாக எஃப்.எஸ்.பி. தெரிவித்தது. இதனையடுத்து ரஷிய டிஜிட்டல் மேம்பாட்டு அமைச்சகம் வெளியிட்டிருக்கும் ஒரு சுற்றறிக்கை அந்நாட்டு அரசாங்க ஊழியர்களுக்கு ஒரு சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளது. "ஐபோன் மற்றும் ஐபேடு மூலமாக அமெரிக்கா, ரஷிய மக்களின் தகவல் தொடர்புகளை அறிந்து கொள்ளும் ஆபத்து இருக்கிறது. இதனால் நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படலாம். எனவே ஐபோன்கள் மற்றும் ஐபேடுகளை வேலை நோக்கங்களுக்காக ரஷிய அரசாங்க ஊழியர்கள் இனி பயன்படுத்தப்பட கூடாது. பணி பயன்பாடுகளுக்கான செயலிகளை உபயோகப்படுத்தவும், வேலை சம்பந்தமான மின்னஞ்சல் பரிமாற்றத்தை செய்யவும், ஆப்பிள் நிறுவன ஸ்மார்ட்போன்கள் மற்றும் டேப்லெட்டுகளை பயன்படுத்த கூடாது. தனிப்பட்ட தேவைகளுக்காக ஐபோன்களைப் பயன்படுத்தலாம்" என ரஷிய அரசாங்கத்தின் டிஜிட்டல் மேம்பாட்டுக்கான அமைச்சர் மக்சுட் ஷடேவ் (Maksut Shadaev) அறிக்கையில் தெரிவித்துள்ளார். ஆனால் ஆப்பிள் நிறுவனம் இந்த குற்றச்சாட்டுகளை மறுத்துள்ளது. ஆப்பிளுடன் இணைந்து இந்த உளவு வேலையில் ஈடுபட்டதாக FSB குற்றம் சாட்டிய அமெரிக்க தேசிய பாதுகாப்பு முகமை இதுகுறித்து கருத்து தெரிவிக்க மறுத்து விட்டது.

# நாங்குநேரி சம்பவம்: ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் ஒருநபர் குழு அமைப்பு

சென்னை, ஆக. 13

நாங்குநேரி சம்பவம் தமிழக மக்கள் அனைவரையும் மிகவும் அதிர்ச்சிக்கும் வேதனைக்கும் உள்ளாக்கியது. இளைய சமுதாயத்தினரிடையே சாதி, இன உயர்வு பரவியிருப்பது எதிர்காலத் தமிழ்நாட்டின் நலனுக்கு உகந்த தல்ல.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில், நாங்குநேரியில் பள்ளி மாணவன் மற்றும் அவன் குடும்பத்தினர், சக மாணவர்களால் மிகக் கொடூரமான முறையில் தாக்கப்பட்ட சம்பவம் தமிழக மக்கள் அனைவரையும் மிகவும் அதிர்ச்சிக்கும் வேதனைக்கும் உள்ளாக்கியது.

சாதி, மத, பேதங்களைக் கடந்து மனிதநேயத்துடன் ஒரு சமுதாயத்தைப் படைத்து, அனைத்து தரப்பு மக்களும் சமூகப் பொருளாதார வளர்ச்சி பெற வேண்டுமென்ற நோக்கில் இந்த அரசு செயலாற்றி வருவதை மக்கள் அறிவார்கள். இச்சூழ்நிலையில் இது போன்ற ஒரு சம்பவம் என்னை மிகுந்த வேதனைக் குள்ளாக்கியுள்ளது.

இளைய சமுதாயத்தினரிடையே சாதி, இன உயர்வு பரவியிருப்பது எதிர்காலத் தமிழ்நாட்டின் நலனுக்கு உகந்ததல்ல. இது உடனடியாக சரி செய்யப்பட வேண்டிய ஒரு முக்கியமான பிரச்சனை என்பதால், இதில் அரசு எந்த வகையான நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பது குறித்தும், பள்ளி, கல்லூரி மாணவர்களிடையே சாதி,

இனப் பிரிவினைகள் இல்லாத ஒரு சூழ்நிலையை உருவாக்கிட மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அரசுக்கு ஆலோசனைகளை வழங்கிட ஓய்வு பெற்ற நீதிபதி சந்துரு தலைமையில் ஒரு நபர் குழு அமைத்திட உத்தரவிட்டுள்ளேன்.

இந்தக் குழு கல்வியாளர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், சமூக சிந்தனையாளர்கள், பத்திரிகைத் துறையினர் என பல்வேறு தரப்பினரிடமிருந்தும் கருத்துக்களைப் பெற்று அதனடிப்படையில் அரசுக்கு விரைவில் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# போதை ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி

திருப்பூர், ஆக. 13

போக்குவரத்து, காவல்துறை சார்பில் போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி, உறுதி மொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. பல பள்ளிகளை சேர்ந்த மாணவர்கள் விழிப்புணர்வு பதாகைகளுடன் பேரணியில் பங்கேற்றனர் மேலும் படிக்க பெருமாநல்லூர்: திருப்பூர் அடுத்த பெருமாநல்லூர்போக்குவரத்து,காவல்துறை சார்பில் போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி, உறுதி மொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. பெருமாநல்லூர் காவல் நிலையம் அருகே உள்ள உத்தமலிங்கேஸ்வரர் கோவிலில் இருந்து தொடங்கிய இந்த பேரணி, திருப்பூர் சாலை, ஈரோடு சாலை, அவிநாசி சாலை வழியாக கொண்டத்து காளியம்மன் கோவிலில் நிறைவடைந்தது. இதில் காவல் ஆய்வாளர் வசந்தகுமார், போக்குவரத்து காவல் ஆய்வாளர் தினகரன், காவல் உதவி ஆய்வாளர்கள் அன்பரசு, உமா மகேஸ்வரி, பள்ளி ஆசிரியர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர். இதில் பெருமாநல்லூர், கணக்கம்பாளையம் அரசு மேல்நிலைப் பள்ளி, கேஎம்சி., பப்ளிக் பள்ளி, சக்திவிக்னேஸ்வரா,விக்னேஸ்வரா, தி இந்தியன் பப்ளிக் பள்ளி உள்ளிட்ட பல பள்ளிகளை சேர்ந்த மாணவர்கள் விழிப்புணர்வு பதாகைகளுடன் பேரணியில் பங்கேற்றனர்.






திண்டுக்கல் ஆர் வி எஸ் பொறியியல் கல்லூரியில் 1994 முதல் 98 வரை இளநிலை பொறியியல் படிப்பை முடித்த மாணவர்களின் வெள்ளி விழா நிகழ்வுகள் சங்கமும் என்ற பெயரில் இன்று 12.8.2023 அன்று ஆர்விஎஸ் மஹாலில் நடைபெற்றது. என்பதற்கும் மேற்பட்ட மாணவர்கள் குடும்பத்துடன் வந்து சிறப்பித்தனர். ஆர் வி எஸ் கல்லூரியின் முன்னாள் முதல்வர் கருப்பணன் அவர்களும் இந்நாள் முதல்வர்கள் முனைவர் ஜெகதீஷன் & முனைவர் ராஜ்குமார் அவர்களும் அறக்கட்டளை உறுப்பினர்களும் விழாவில் கலந்து கொண்டனர். மாணவ மாணவியர்கள் தாங்கள் படித்த கல்லூரியை விடுதியை சுற்றிப் பார்த்தனர் பெரும் ஆறு வாரத்திற்கு இடையே விழா இனிதே நிறைவுற்றது.

# ரேசன் கடைகளில் தேங்காய் எண்ணெய் விற்பனை உழவர் உழைப்பாளர் கட்சி வலியுறுத்தல்



திருப்பூர், ஆக. 13

டெல்லியில்மத்தியவேளாண்மை துறை அமைச்சர் கைலாஷ் சௌத்திரி, மத்திய நீர்பாசன துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் ஆகியோரை உழவர் உழைப்பாளர் கட்சி மாநிலத் தலைவர் செல்லமுத்து, மகளிர்அணி தலைவி ராஜரீகா, கோவை மாவட்ட பொருளாளர் மகாலிங்கம்,அதிமுக., திருப்பூர் புறநகர் மாவட்ட ஜெயலலிதா பேரவை செயலாளர் புத்தரச்சல் பாபு உள்ளிட்டோர் சந்தித்து கோரிக்கை மனு அளித்தனர். இது குறித்து பல்லடத்தில் உழவர் உழைப்பாளர் கட்சி மாநிலத் தலைவர் செல்லமுத்து செய்தியாளர்களிடம் கூறியதாவது: தென்னை விவசாயிகள் விலை வீழ்ச்சியால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். விவசாய வேலைக்கு ஆட்கள் கிடைக்காததால் இருக்கின்ற தண்ணீரை கொண்டு தென்னைசாகுபடியில் விவசாயிகள் ஆர்வத்துடன் ஈடுபட்டனர். அதனால் தற்போது தேங்காய் விளைச்சல் அதிகரித்துள்ளது. அதன் காரணமாக தேங்காய் விலை வீழ்ச்சி அடைந்து தென்னை விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர். அதே சமயம் ரேசன் கடைகளில் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பாமாயிலை அரசின் மானியத்தில் குறைந்த விலைக்கு ரேசன் அட்டைதாரர்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. அருகில் உள்ள கேரளாவில் தேங்காய் எண்ணெய் வீட்டு சமையல், நொருக்கு தீனி உள்ளிட்ட அனைத்திற்கும் பயன்படுத்தப்படுகிறது. தேங்காய் எண்ணெய் உடலுக்கு ஆரோக்கியத்தை அளிக்கிறது. நாடு முழுவதும் ரேசன் கடைகளில் தேங்காய் எண்ணெய் விற்பனை செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்தோம். தமிழக அரசும் ரேசன் கடைகளில் தேங்காய் எண்ணெய் விற்பனை செய்ய ஆர்வம் காட்டி வருவதாகவும் முதல் கட்டமாக 6 மாவட்டங்களில் மட்டும் தேங்காய் எண்ணெய் விற்பனை செய்யப்படும். அதன் பின்னர் மற்ற மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்படும் என்று வேளாண்மை துறை அமைச்சர் தெரிவித்தார். மேகதாது நதியின் குறுக்கே கர்நாடகா அரசு தடுப்பனை கட்ட திட்டமிட்டுள்ளதை தடுக்க வேண்டும் என்றதற்கு இத்திட்டத்திற்கு மத்திய அரசு அனுமதி அளிக்காது என்றும் காவேரி நதியில் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விட காவிரி ஆணையம் ஆணையிட மத்திய அரசு கேட்டுக்கொள்ளும். 100 நாள் வேலை திட்ட வேலை ஆட்களை விவசாய வேலைக்கு பயன்படுத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும். கள் இறக்கி விற்பனை செய்ய அனுமதிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தோம். இது குறித்து பரிசீலனை செய்வதாக அமைச்சர்கள் தெரிவித்தனர். இவ்வாறு அவர் தெரிவித்தார். பேட்டியின் போது உழவர் உழைப்பாளர் கட்சி மாநில செயலாளர் சின்னக்காளிபாளையம் ஈஸ்வரன், திருப்பூர்மாவட்ட தலைவர் ஈஸ்வரமூர்த்தி, செயலாளர் நடராஜன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## பெருமாநல்லூர் அருகே வடமாநில தொழிலாளியிடம் செல்போன் பறித்த 4 பேர் கைது

திருப்பூர், ஆக. 13

திருப்பூர் மாவட்டம் பெருமாநல்லூர் அருகே உள்ள தாண்டாகவுண்டன் புதூர்பகுதியில் பீகார்மாநிலத்தை சேர்ந்த பாரத்சகினி என்பவர் நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது திருச்சியை சேர்ந்த காளிமுத்து மகன் திலோத் (வயது 22), கரூரை சேர்ந்த ரங்கன் என்பவரது மகன் சண்முகவேல் (23),திருச்சியை சேர்ந்த ரவி மகன் விஷ்வா (22), செந்தில்குமார் மகன் அறிவழகன் (22) ஆகிய 4 பேரும் சேர்ந்து செல்போனை பறித்து சென்றதாக தெரிகிறது. பாரத்சகினி பெருமாநல்லூர் போலீசில் புகார் செய்தார். அதன்பேரில் குற்றவாளிகளை பிடிக்க போலீசார் வலைவீசி தேடி வந்தனர். போலீஸ் இன்ஸ்பெக்டர் வசந்தகுமார் தலைமையில்சப் இன்ஸ்பெக்டர் உமா மகேஷ்வரி, மற்றும் போலீசார் அன்பரசன், கார்த்திகேயன்,மயில்சாமி,சதீஷ்குமார் ஆகியோர் கொண்ட தனிப்படையினர்ரோந்துபணியில் ஈடுபட்டபோது மேற்கண்ட 4 பேரையும் பிடித்து கைது செய்தனர். பின்னர் அவர்கள் திருப்பூர் கோர்ட்டில் ஆஜர் படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

## காலி குடங்களுடன் மறியலுக்கு முயன்ற பெண்கள்

பெரம்பலூர், ஆக. 13

போதிய அளவு குடிநீர் விநியோகிக்கப்படாததை கண்டித்து மறியல் போராட்டத்திற்கு முயற்சி காசு கொடுத்து தண்ணீர் வாங்கும் அவல நிலை உள்ளதாக குற்றச்சாட்டு

பெரம்பலூர் நகராட்சிக்கு உட்பட்ட 21 வார்டுகளிலும் ஏற்கனவே காவிரி குடிநீர் பிரச்சினை இருந்து வருகிறது. மாதத்திற்கு 15 நாட்களுக்கு ஒரு முறை தான் காவிரி குடிநீர் வினியோகிக்கப்பட்டு வருகிறது. மற்ற நாட்களில் கிணற்று தண்ணீர் வினியோகிக்கப்பட்டு வருகிறது. காவிரி குடிநீரும், கிணற்று தண்ணீரும் போதிய அளவு வினியோகிக்கப்படாததால் பொது மக்கள் தண்ணீரை காசு



கொடுத்து வாங்கி வருகின்றனர். இந்த நிலையில் 12 வது வார்டுக்கு உட்பட்ட கம்பன் தெருவிற்கு கடந்த 20 நாட்களுக்கு மேலாக காவிரி குடிநீர் வினியோகிக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. மேலும் வினியோகிக்கப்படும் கிணற்று தண்ணீரும் கலங்கலாக வருவதாக தெரிகிறது. அந்த தண்ணீரும் போதிய அளவு வினியோகிக்கப்படுவதில்லை. இது குறித்து அப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட நகராட்சி அதிகாரிகளிடம் பல முறை முறையிட்டும், எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. இதனால் ஆத்திரமடைந்த அப்பகுதி பெண்கள் பெரம்பலூர் புதிய பஸ் நிலையம் செல்லும் சாலையில் மறியல் போராட்டத்தில் ஈடுபட காலிக்குடங்களுடன் வந்ததால் பரபரப்பு ஏற்பட்டது. இது குறித்து தகவல் அறிந்த பெரம்பலூர் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து மறியலில் ஈடுபட வந்த பெண்களிடம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். அப்போது அவர்கள் நகராட்சி நிர்வாகத்தில் பேசி காவிரி குடிநீரும், கிணற்று தண்ணீரும் போதிய அளவு வினியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியதை தொடர்ந்து அவர்கள் மறியலில் ஈடுபடும் முடிவை கைவிட்டு கலைந்து சென்றனர்.

## பல்லடம் நகராட்சிக்கு சொந்தமான கடைகள் ஏலம்

பல்லடம், ஆக. 13

காலியாக உள்ள 34 கடைகளுக்கு நேற்று ஏலம் நடைபெற்றது. ஆண்டிற்கு 22 லட்சத்து 65 ஆயிரம் ரூபாய் வருவாய் கிடைக்கும்.

பல்லடம் நகராட்சிக்கு சொந்தமான பஸ் நிலையம், அண்ணா வணிக வளாகம், தினசரி மார்க்கெட் ஆகிய பகுதிகளில் காலியாக உள்ள 34 கடைகளுக்கு ஏலம் நடைபெற்றது. நகராட்சி ஆணையாளர் முத்துசாமி, மேலாளர் சண்முகராஜா, வருவாய் ஆய்வாளர் பிரகாஷ் உள்ளிட்டோர் ஏலத்தை நடத்தினர். காலியாக உள்ள 34 கடைகளுக்கு நேற்று ஏலம் நடைபெற்றது.

இதில் வியாபாரிகள் கலந்துகொண்டு பஸ் நிலையத்தில் 14 கடைகளும், தினசரி மார்க்கெட்டில் 3 கடைகளும், தலா ரூ. 11ஆயிரம் முதல் 11.500 வரை ஏலத்தில் எடுக்கப்பட்டது. இதன் மூலம் நகராட்சிக்கு ஆண்டிற்கு 22 லட்சத்து 65 ஆயிரம் ரூபாய் வருவாய் கிடைக்கும். இவ்வாறு அதிகாரிகள் தெரிவித்தனர்.



## சாலைகளில் சுற்றித்திரியும் கால்நடைகள்: வாகன ஓட்டிகள், பொதுமக்கள் அச்சம்

ஈரோடு, ஆக. 13

மாடுகள் சாலையில் படுத்துக்கொள்வதும் தொடர்கதையாகி வருகிறது. இதனால் வாகன ஓட்டிகள் விபத்தில் சிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. மேலும் படிக்க தாளவாடி: ஈரோடு மாவட்டம் தாளவாடி பகுதியில் 80க்கும் மேற்பட்ட மலை கிராமங்கள் உள்ளன. இந்த மலை கிராமத்தைச் சேர்ந்த பொதுமக்கள் சத்திய மங்கலம், கோவை, ஈரோடு மற்றும் கர்நாடகா மாநிலம் மைசூர், சாம்ராஜ்நகர் செல்வதற்கு தாளவாடி வந்து செல்வது வழக்கம். அதேபோல மலைக் கிராமத்தை சேர்ந்த பொது மக்கள் அத்தியாவசிய பொருட்கள் வாங்க தினந்தோறும் தாளவாடி சென்று வருவது வழக்கம். இதனால் எப்பொழுதும் பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் நடமாட்டம் இருந்து கொண்டே இருக்கும். கிராமப் பகுதிகளில் வசிக்கும் சிலர் தங்களது கால்நடைகளான



மாடுகளை பகல் நேரங்களில் தாளவாடியில் உள்ள முக்கிய பகுதிகளுக்கு மேய்ச்சலுக்கு அனுப்பி விடுகின்றனர். எப்போதும் போக்குவரத்து நெரிசல் மிகுந்த இந்த சாலைகளில் 20க்கும் மேற்பட்ட மாடுகள் பகல் நேரங்களில் முக்கிய சாலையில் உலா வருவதும் சாலையில் படுத்துக்கொள்வதும் தொடர்கதையாகி வருகிறது. இதனால் போக்குவரத்து பாதிப்பு ஏற்படுவதுடன் வாகன ஓட்டிகள் விபத்தில் சிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அவ்வழியாக நடந்து செல்லும் பள்ளி மாணவமாணவிகள் அச்சத்துடனே சென்று வருகின்றனர். சில மாடுகள் ஒன்றுடன் ஒன்று சண்டை போட்டுக்கொண்டு பேருந்துக்காக காத்து நிற்கும் பயணிகள் மீது விழுகிறது. இதனால் பயணிகள் அச்சத்துடனே பேருந்து நிலையத்தில் இருக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. இது குறித்து ஊரா ட்சி நிர்வாகம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை வைத்தனர். இந்நிலையில் தாளவாடி ஊராட்சி மற்றும் காவல் துறை சார்பில் ஒலிபெருக்கி மூலம் தாளவாடி பேருந்து நிலையம், ஓசூர் சாலை, சாம்ராஜ்நகர் சாலை, தலமலை சாலை, தொட்ட காஜனூர் பகுதியில் தங்களது மாடுகளை வீட்டுக்கு பிடித்து செல்ல வேண்டும் எனவும் மீறி சாலையில் சுற்றித்திரிந்தால் மாடுகளை பறிமுதல் செய்து மாட்டின் உரிமையாளர்க்கு அபராதம் விதிக்கப்படும் என ஊராட்சி நிர்வாகத்தின்சார்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. சென்னையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு சாலையில் நடந்த சென்ற சிறுமியை மாடு ஒன்று முட்டி தாக்கும் வீடியோ சமூகங்களில் வைரல் ஆனது. இதைத்தொடர்ந்து மாடுகளைவீதியில்திரியவிடும் உரிமையாளர்களுக்கு அபராதம் விதிக்கப்படும் என சென்னை மாநகராட்சி எச்சரிக்கை விடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## விதை விற்பனை நிலையங்களில் அதிகாரிகள் ஆய்வு

பெரம்பலூர், ஆக. 13

பெரம்பலூர் மாவட்டத்தில் ஆடிப்பட்டத்தில் பருத்தி, மக்காச்சோளம்



பெருமளவில் பயிரிடப்படுகிறது. மாவட்டத்தில் 204 விதை விற்பனை நிலையங்கள் உள்ளன. திருச்சி விதை ஆய்வு துணை இயக்குனர் கோவிந்தராசு தலைமையில் விதை ஆய்வாளர்கள் மற்றும் அலுவலர்கள் ஆகியோர் கொண்ட குழு அமைக்கப்பட்டு, பாடாலூர், பெரம்பலூர், வேப்பந்தட்டை, கிருஷ்ணாபுரம், பசும்பலூர், வாலிகண்டபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள விதை விற்பனை நிலையங்களில் ஆய்வு செய்தனர்.

இந்த ஆய்வின்போது பருத்தி, மக்காச்சோளம் ஆகிய பயிர்களின் 100 எண்கள் விதை மாதிரிகள் பகுப்பாய்விற்காக எடுக்கப்பட்டு, விதை பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பப்பட்டு, விதையின் தரம் சோதிக்கப்பட உள்ளது. பெரம்பலூர் மாவட்டத்தில் இந்த ஆண்டு கடந்த ஏப்ரல் மாதம் 1ந் தேதி முதல் தற்போது வரை 308 விதை மாதிரிகள் எடுக்கப்பட்டுள்ளதாக துணை இயக்குனர் தெரிவித்தார்.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

## "நீட் விலக்கு மசோதாவில் எந்த காலத்திலும் கையெழுத்து போடமாட்டேன்" மாணவர்கள் மத்தியில் கவர்னர் பேச்சு

சென்னை, ஆக. 13

பயிற்சி மையத்தில் படித்தால் தான் நீட் தேர்வில் வெற்றி பெற முடியும் என்பதெல்லாம் போலி பிம்பம். மருத்து ஊழலை நீட் தேர்வு தடுத்துள்ளது. தேசத்திற்கு நீட் தேர்வு கண்டிப்பாக தேவை.

மருத்துவ படிப்பில் சேருவதற்கான நீட் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவமாணவிகளை தமிழக கவர்னர் ஆர்.என். ரவி சந்தித்து கலந்துரையாடல் செய்ய திட்டமிட்டார். நீட் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற 100 மாணவமாணவிகள் மற்றும் அவரது பெற்றோர்களுக்கு அழைப்பு கொடுக்கப்பட்டது. சென்னைகிண்டியில் உள்ள கவர்னர் மாளிகையில் இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. தமிழகத்தின் பல்வேறு பகுதியில் இருந்து மாணவமாணவிகள் வந்திருந்தனர். மாணவர்கள்தனியாகவும் பெற்றோர்கள் தனியாகவும் இருக்கையில் அமர வைக்கப்பட்டனர். அவர்களிடம் கவர்னர் ஆர்.என்.ரவி கலந்துரையாடல் நடத்தினார். முன்னதாக மாணவமாணவிகள் ஒவ்வொருவராக நீட் மதிப்பெண் அடிப்படையில் மேடைக்கு அழைக்கப்பட்டனர். அவர்களுக்கு கவர்னர் ஆர்.என். ரவி சால்வை அணிவித்து நினைவுப் பரிசு வழங்கினார். பின்னர்மாணவர்கள் மத்தியில் கவர்னர் பேசினார். பின்னர் மாணவர்களிடம் கேள்விகளை கேட்டு கலந்துரையாடினார். மாணவர்கள் ஆர்வமாக அவருடன் பேசினர். சேலத்தை சேர்ந்த பெற்றோர் ஒருவர் கவர்னரிடம் நீட் விலக்கு மசோதாவில் தாங்கள் கையெழுத்து போடாமல் இருக்கிறீர்களே? என்று கேட்டார். அதற்கு கவர்னர் ஆர்.என். ரவி பதிலளித்து கூறியதாவது: நீட் விலக்கு மசோதாவில் எந்த காலத்திலும் நான் கையெழுத்து போட மாட்டேன். நீட் தேர்வுக்கு விலக்கு அளிப்பது மாணவர்களின் போட்டி போடும் திறனை கேள்விக்குறியாக்கிவிடும். நீட் தேர்வுக்கு பயிற்சி மையங்களுக்கு சென்று படிக்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை. நீட் குறித்த தவறான புரிதல் இந்த மாநிலத்தில் உள்ளது. கடந்த ஒரு வருடத்தில் நீட் தொடர்பான தற்கொலைகள் பற்றி கேள்விப்படவில்லை. அதற்கு முன்பு எந்த மாணவர் இறந்தாலும் நீட் தேர்வு தான் காரணம் என தவறான பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். பயிற்சி மையத்தில் படித்தால் தான் நீட் தேர்வில் வெற்றி பெற முடியும் என்பதெல்லாம் போலி பிம்பம். நீட் தேர்வு வந்த பிறகு ஏழை, எளிய, அரசுப்பள்ளி மாணவர்களுக்கு மருத்துவ படிப்பு கிடைக்க வழிவகை ஏற்பட்டுள்ளது. மருத்துவ படிப்பில் அரசு பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. நீட் தேர்விற்கு முன்பு ரூ.1000 கோடி வியாபாரமாக மருத்துவ படிப்பு இருந்தது. இன்று நிலைமை மாறி உள்ளது. மருத்து ஊழலை நீட் தேர்வு தடுத்துள்ளது. தேசத்திற்கு நீட் தேர்வு கண்டிப்பாக தேவை. பல ஆயிரம் கோடி ஊழல் நிறைந்த மருத்துவ படிப்பை ஊழல் இல்லாததாக நீட் மாற்றி உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.




## செந்தில் பாலாஜிக்கு ஆக.25 வரை நீதிமன்ற காவல் நீட்டிப்பு

சென்னை, ஆக. 13

இன்றுடன் 5 நாட்கள் நீதிமன்ற காவல் நிறைவடைந்ததை அடுத்து சென்னை முதன்மை அமர்வு நீதிமன்ற நீதிபதி அல்லி முன்பு செந்தில் பாலாஜி ஆஜர்படுத்தப்பட்டார். நீதிமன்ற காவல் நீட்டிப்பை அடுத்து செந்தில் பாலாஜி மீண்டும் சிறைக்கு அழைத்து செல்லப்படுகிறார்.

போக்குவரத்து கழகத்தில் வேலை வாங்கி தருவதாக ஏமாற்றி பணம் வாங்கிய குற்றச்சாட்டில் சட்ட விரோத பணபரிமாற்றம் நடைபெற்றிருப்பதாக கூறி அமலாக்கத்துறையினர் அமைச்சர் செந்தில் பாலாஜியை கடந்த ஜூன் 14ந்தேதி கைது செய்தனர். இந்த வழக்கில் புழல் சிறையில் அடைக்கப்பட்டிருந்த செந்தில் பாலாஜியை அமலாக்கத்துறையினர் கடந்த 7ந்தேதி காவலில் எடுத்தனர். இன்றுடன் 5 நாட்கள் நீதிமன்ற காவல் நிறைவடைந்ததை அடுத்து சென்னை முதன்மை அமர்வு நீதிமன்ற நீதிபதி அல்லி முன்பு செந்தில் பாலாஜி ஆஜர்படுத்தப்பட்டார். அப்போது, மேலும் 5 நாட்கள் காவலில் விசாரிக்க அனுமதி கோரி அமலாக்கத்துறை தரப்பில் மனு அளிக்கப்பட்டது. இதையடுத்து அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு ஆகஸ்ட் 25ம் தேதி வரை நீதிமன்றக் காவல் நீட்டித்து நீதிபதி அல்லி உத்தரவிட்டார். நீதிமன்ற காவல் நீட்டிப்பை அடுத்து செந்தில் பாலாஜிமீண்டும்சிறைக்கு அழைத்து செல்லப்படுகிறார்.



## வணிக நிறுவன பால் விலை உயர்வு: ஆவின் விளக்கம்

சென்னை, ஆக. 13

5 லிட்டர் பச்சை நிற ஆவின் பால் பாக்கெட் விலை லிட்டருக்கு ரூ. 2 வீதம் 10 ரூபாய் உயர்ந்து தற்போது 220 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஆவின் பச்சை நிற பால் பாக்கெட் பொதுமக்களுக்கு ஒரு லிட்டர் ரூ.44 க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

வணிக நிறுவனத்திற்காக விற்பனை செய்யப்படும் ஆவின் பச்சை நிற பால் பாக்கெட் விலை உயர்ந்துள்ளது. 5 லிட்டர் பச்சை நிற ஆவின் பால் பாக்கெட் விலை லிட்டருக்கு ரூ. 2 வீதம் 10 ரூபாய் உயர்ந்து தற்போது 220 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. முன்னதாக 210 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த நிலையில் தற்போது 10 ரூபாய் அதிகரித்துள்ளது. பொது மக்களுக்கு வழங்கப்படும் விலையிலேயே வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் விலை மாற்றம் செய்யப்பட்டுள்ளது. ஆவின் பச்சை நிற பால் பாக்கெட் பொதுமக்களுக்கு ஒரு லிட்டர் ரூ.44 க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதனை ஊடகங்கள் தவறாக புரிந்துகொண்டு ஆவின் நிறுவனம் பச்சை நிற பால் பாக்கெட்டுகளின் விலையை உயர்த்தி விட்டதாக தெரிவித்துள்ளது. உண்மையில் பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ள அதே விலையை வணிக பயன்பாட்டு நிறுவனங்களுக்கும் வழங்கவே வணிக நிறுவனங்களுக்கான விலை மாற்றி அமைக்கப்பட்டுள்ளதாக ஆவின் நிறுவனம் விளக்கம் அளித்துள்ளது.



## நெஞ்சுவலி காரணமாக பெங்களூரு ஆஸ்பத்திரியில் அமைச்சர் அன்பில் மகேஷ் அனுமதிக்கப்பட்டார்

தர்மபுரி, ஆக. 13

அரசு விழாவில் பங்கேற்று விட்டு மதியம் மீண்டும் சென்னைக்கு செல்வதற்காக அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி காரில் புறப்பட்டார். பாதுகாப்பு பணிக்காக ஆஸ்பத்திரி முன்பு ஏராளமான போலீசார் குவிக்கப்பட்டனர்.

அரசு விழாவில் கலந்து கொள்வதற்காக சென்னையில் இருந்து பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி இன்று காலை சேலம் வந்தார். அவர் அரசு விழாவில் பங்கேற்று விட்டு மதியம் மீண்டும் சென்னைக்கு செல்வதற்காக காரில் புறப்பட்டார். அப்போது அவர் தருமபுரி மாவட்டம் காரிமங்கலம் அருகே வந்த போது அன்பில் மகேஷ் பொய்யாமொழிக்கு திடீரென்று நெஞ்சுவலி ஏற்பட்டது. உடனே அவரை உடன் சென்ற அதிகாரிகள் மற்றும் போலீசார் காரிமங்கலத்தில் உள்ள தனியார் ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. இதுகுறித்து தகவலறிந்த அமைச்சர்கள் சக்கரபாணி, சிவசங்கர் ஆகியோர் மருத்துவமனைக்கு வந்து மகேஷின் உடல் நிலை குறித்து விசாரித்தனர். மேலும் தருமபுரி மாவட்ட தி.மு.க செயலாளர்கள் தடங்கம் சுப்ரமணி, முன்னாள் அமைச்சர் பி.பழனியப்பன், மாநில பொறுப்பாளர் சூடப்பட்டி சுப்ரமணி, ஒன்றிய செயலாளர் அடிலம் அன்பழகன் மற்றும் கட்சி நிர்வாகிகள் பலர் உடனே அமைச்சரை பார்ப்பதற்காக தனியார் ஆஸ்பத்திரிக்கு திரண்டனர். பின்பு மேல்சிகிச்சைக்காக பெங்களூரில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அமைச்சருக்கு நெஞ்சுவலி ஏற்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் காட்டு தீ போல் பரவியது.



## வனவிலங்குகளை வேட்டையாட முயற்சி செய்த 2 வாலிபர்களுக்கு ரூ. 2 லட்சம் அபராதம்

தர்மபுரி, ஆக. 13

வனத்துறையினர் கத்திரிப்பட்டி, கம்பாலை பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தனர். கள்ள நாட்டு துப்பாக்கிகளை பறிமுதல் செய்தனர்.

தருமபுரி மாவட்டம், தீர்த்தமலை அருகே தீர்த்தமலை வனச்சரகர் பெரியண்ணன் தலைமையிலான வனவர்கள் கணபதி, வடிவேல், வனக்காப்பாளர்கள் வெங்கடேசன், மதன்குமார் மற்றும் வனத்துறையினர்கத்திரிப்பட்டி, கம்பாலை பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அதே பகுதியை சேர்ந்த சேட்டு மகன்கள் தருமன் (28), சரவணன் (20) இருவரும், கள்ளநாட்டு துப்பாக்கி வைத்து வனவிலங்குகளை வேட்டையாட முயற்சி செய்யும் போது கையும், களவுமாக பிடித்தனர்.

இதனையடுத்து அவர்களை தருமபுரி மாவட்ட வன அலுவலர் அப்பால நாயுடு முன் ஆஜர்படுத்தியதில் தலா ரூ,2,00,000 அபராதம் விதித்து எச்சரிக்கை செய்து அனுப்பினார். மேலும் கள்ளநாட்டு துப்பாக்கிகளை பறிமுதல் செய்தனர்.



# கோவையில் அம்மன் தலை மீது அமர்ந்து காட்சி தரும் பச்சைக்கிளி

கோவை, ஆக, 13

கோவை மாவட்டம் சூலூர் அருகே உள்ளது இருகூர் கிராமம். இந்த கிராமத்தில் பழமை வாய்ந்த மாசாணி அம்மன் கோவில் உள்ளது. இந்த மாசாணி அம்மன் சுயம்புவாக தோன்றியதாகவும் கதை வரலாறுகள் உள்ளது. மாதந்தோறும் அமாவாசை நாட்களில் இங்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்று வருகிறது.

இதுதவிர வெள்ளி, செவ்வாய் தினங்களிலும் பூஜைகள் நடைபெறும். இந்த கோவிலில் உள்ளூர் பக்தர்கள் மட்டுமின்றி, வெளியூர் பக்தர்களும் தினமும் வந்து சாமி தரிசனம்



செய்து செல்வார்கள்.

ஆடி மாதத்தில் வரும் அனைத்து வெள்ளிக்கிழமைகளிலும் கோவிலில் சிறப்பு பூஜை நடைபெறுவது வழக்கம்.

ஆடி மாதம் முழுவதும் இந்த கோவிலில் உள்ள அம்மன் சிலை மீது பச்சைக்கிளி அமர்வது வழக்கம். இதனை பக்தர்களும் தரிசித்து செல்வார்கள். இந்த ஆண்டும் அதே போல ஆடி வெள்ளிக்கிழமைகளில் சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. இந்த பூஜைகளின் போது, மாசாணியம்மன் தலையிலும், வெளியே அமைக்கப்பட்டுள்ள சிவன், பார்வதி ஊஞ்சலிலும் கிளி அமர்ந்து தரிசனம் தந்து வருகிறது.

இந்த ஆண்டு நடைபெற்றசிறப்புபூஜையிலும் கிளி அமர்ந்து தரிசனம் கொடுத்து வருகிறது. இதனை காண்பதற்காகவும், கிளி அம்மன் தலையில் அமர்ந்திருப்பதை தரிசிப்பதற்காகவும் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த மக்கள் வந்து சாமி தரிசனம் செய்து சென்றனர்.

# சுதந்திரதினத்தை முன்னிட்டு நெல்லை ரெயில் நிலையத்தில் போலீசார் தீவிர சோதனை

நெல்லை, ஆக. 13

76வது சுதந்திர தின விழா வருகிற 15ந் தேதி (செவ்வாய்க்கிழமை) உற்சாகமாக கொண்டா டப்பட உள்ளது. இதையொட்டி நாடு முழுவதும் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப் பட்டுள்ளன. வ.உ.சி. மைதானம் நெல்லை மாவட்ட நிர்வாகம் சார்பில் பாளை வ. உ. சி. மைதானத்தில் சுதந்திர தினவிழா கொண்டாடப்படுகிறது. மாவட்ட கலெக்டர் கார்த்திகேயன் தேசிய கொடி ஏற்றி மரியாதை செலுத்துகிறார். கடந்த ஆண்டு போலவே இந்த ஆண்டும் மாணவமாணவிகள் கலை நிகழ்ச்சி, தீயணைப்பு வீரர்களின் சாகசங்கள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகிறது.மேலும் சுதந்திரப் போராட்ட தியாகிகள் கவுரவிப்பு, மாவட்டம் மற்றும் மாநகரில் சிறப்பாக பணிபுரிந்த போலீசாருக்கு நற்சான்றிதழ் வழங்கி சுதந்திரதினவிழாவில் கலெக்டர் கார்த்திகேயன் வழங்குகிறார்.



இதனையொட்டி பாளை ஆயுதப்படை மைதானத்தில் கடந்த 2 நாட்களாக போலீசார், என்.சி.சி. மாணவர்கள் அணிவகுப்பு ஒத்திகையில் ஈடுபட்டு வருகிறார்கள். இன்றும் வ.உ.சி. மைதானத்தில் என்.சி.சி. மாணவர்கள் அணிவகுப்பு ஒத்திகையில் ஈடுபட்டனர். ரெயில் நிலையம் நெல்லைசரகடி.ஐ.ஜி. பிரவேஷ் குமார் உத்தரவின்பேரில் நெல்லை மாவட்டத்தில் போலீஸ் சூப்பிரண்டு சிலம்பரசன் தலைமையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. வெளி மாவட்டங்கள், பிற மாநிலங்களில் இருந்து வரும் வாகனங்களை மாவட்ட எல்லைகளில் நிறுத்தி சோதனை செய்ய ஏற்பாடு செய்யப்படட்டு வருகிறது. இந்நிலையில் நெல்லை சந்திப்பு ரெயில் நிலையத்தில் இன்று ரெயில்வே போலீஸ் இன்ஸ்பெக்டர் செல்வி தலைமயில் தீவிர சோதனை நடத்தப்பட்டது. அப்போது தண்டவாளங்கள், பிளாட்பாரங்கள் உள்ளிட்ட பகுதியில் மெட்டல் டிரெக்டர் மற்றும் மோப்பநாய் மூலம் சோதனை நடத்தப்பட்டது. மேலும் ரெயில் நிலையத்திற்கு வந்த பயணிகளின் உடமைகள் தீவிர பரிசோதனைக்கு பின்னரே அனுமதிக்கப்பட்டனர். தொடர்ந்து ரெயில் நிலைய பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள், கார் உள்ளிட்ட வாகனங்களை இருப்புபாதை போலீசார் தீவிர ஆய்வு செய்தனர். இந்த சோதனையில் சப் இன்ஸ்பெக்டர்கள் முத்தமிழ், சத்தியராஜ், சங்கர பாண்டியன், ரெயில்வே பாதுகாப்பு சப்இன்ஸ்பெக்டர் முத்துராஜ், அருள் மற்றும் போலீசார் ஈடுபட்டனர்.

# மங்கலம்பேட்டையில் போதை பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு ஊர்வலம்

கடலூர், ஆக. 13

விருத்தாசலம் காவல் துணை கண்காணிப்பாளர் ஆரோக்கியராஜ் அறிவுறுத்தலின் பேரில், தமிழ்நாடு காவல் துறை மற்றும் பள்ளிக் கல்வித்துறை சார்பில்,விருத்தாசலம்அடுத்த மங்கலம் பேட்டையில், போதைப் பொருட்கள் பயன்படுத்துவதால் உண்டாகும் தீமைகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், மங்கலம் பேட்டை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவ, மாணவிகளின் சார்பில் விழிப்புணர்வு ஊர்வலம் நடந்தது.



இந்த நிகழ்ச்சிக்கு, மங்கலம்பேட்டை போலீஸ் இன்ஸ்பெக்டர் சந்திரசேகர் தலைமை தாங்கினார். அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் கண்ணன், அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் காளமேகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் இருந்து தொடங்கி விழிப்புணர்வு பேரணியானது மங்கலம்பேட்டை கடை வீதி, மெயின் ரோடு வழியாக சென்று புல்லூர் சோதனைச் சாவடியை சென்றடைந்தது. இந்த பேரணியின் போது, போதைப் பொருட்களை பயன்படுத்துவதால் உண்டாகும் தீமைகள் குறித்து விழிப்புணர்வு பதாகைகளை கையில் ஏந்தியும், கோஷங்கள் எழுப்பியும் பள்ளி மாணவ, மாணவிகள் ஊர்வலமாக சென்றனர். இதில் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் தேவி, சிறப்பு சப்இன்ஸ்பெக்டர் புருஷோத்தமன், தனிப்பிரிவு தலைமைக் காவலர் ராஜசேகர், பள்ளி ஆசிரியர்கள் பாபாஜி, விசாலாட்சி, சங்கர், சுடர் ஒளி, அனிதா உள்ளிட்ட ஆசிரியர், ஆசிரியைகள் பலர் கலந்து கொண்டனர்.

# அ.தி.மு.க. மாநாடு அழைப்பிதழ் வழங்கிய முன்னாள் அமைச்சர்

மதுரிய, ஆக. 13

உசிலம்பட்டியில் அ.தி.மு.க. மாநாடு அழைப்பிதழை முன்னாள் அமைச்சர் வழங்கினார். இதற்கான அழைப்பிதழ் வழங்கும் நிகழ்ச்சி உசிலம் பட்டி நகர அலுவலகத்தில் நடந்தது.

மதுரையில் அ.தி.மு.க. எழுச்சி மாநாடு வருகிற 20 ந்தேதி நடைபெறுகிறது. இதற்கான அழைப்பிதழ் வழங்கும் நிகழ்ச்சி உசிலம் பட்டி நகர அலுவலகத்தில் நடந்தது. நகர செயலாளர் பூமாராஜா



தலைமை தாங்கினார். முன்னாள் அமைச்சர் ஆர். பி.உதயகுமார் கலந்து கொண்டு மரக்கன்றுகளையும், அழைப்பிதழ்களையும் வழங்கினார். இதில் முன்னாள் எம். எல்.ஏ.க்கள் தமிழரசன், எஸ்.எஸ்.சரவணன், மாணிக்கம், பேரவை துணைச் செயலாளர்கள் வெற்றிவேல், இளங்கோவன், துரைதனராஜன், மாவட்ட கவுன்சிலர் சுதாகரன், மாணவரணி செயலாளர் மகேந்திர பாண்டியன், ஒன்றிய செயலாளர்கள் செல்லம்பட்டி ராஜா, சேடபட்டி பிச்சைராஜன், ஏழுமலை வாசிமலை, நகர நிர்வாகிகள் லட்சுமணன், உக்கிர பாண்டி, ரகு மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# மதுரையில் நகை, பணம், பேட்டரிகள் திருட்டு

மதுரை, ஆக. 13

மதுரை தனக்கன்குளம் பைரவர் நகர் 6வது குறுக்கு தெரு திருவள்ளுவர் நகர் விரிவாக்க பகுதியை சேர்ந்தவர் பாஸ்கரன் (45). இவர் குடும்பத்து டன் வெளியூர் சென்றிருந் தார். இதை நோட்டமிட்ட மர்ம நபர்கள் வீட்டின் கதவை உடைத்து உள்ளே புகுந்து பீரோவில் இருந்த 11 பவுன் நகைகள், ரூ.1 லட்சத்து 8 ஆயிரத்து 500ஐ கொள்ளை யடித்து சென்று விட்டனர். வெளியூரில் இருந்து பாஸ்கரன் திரும்பி வந்து பார்த்தபோது நகைபணம் கொள்ளை போனது தெரிய வந்தது. இதுகுறித்து திருநகர் போலீசில் அவர் புகார் செய்தார். போலீசார் வழக்குப்பதிவு செய்து மர்ம நபர்களை தேடி வருகின்றனர். அண்ணாநகர்மஸ்தான்பட்டி மீனாட்சிபட்டியில் தனியார் நிறுவனத்திற்கு சொந்தமான டவர் ஒன்று உள்ளது. இந்த டவரில் 24 பேட்டரிகள் பொருத்தப் பட்டிருந்தன. இங்கு காவலாளியாக சென்னை ஆதம்பாக்கத்தை சேர்ந்த சந்திரன் (40) என்பவர் இருந்து வருகிறார். இந்த நிலையில் டவரில் பொருத்தப்பட்டிருந்த 24 பேட்டரிகளை மர்ம நபர்கள் திருடிச்சென்று விட்டனர். இதுகுறித்து சந்திரன் அண்ணா நகர் போலீசில் புகார் செய்தார். போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# விவசாயிகள், மக்கள் குறித்து மு.க.ஸ்டாலினுக்கு அக்கறை இல்லை: எடப்பாடி பழனிசாமி பேச்சு

சேலம், ஆக. 13

நீர் திறந்தால்தான் கூட்டத்தில் பங்கேற்பேன் என முதலமைச்சர் நிபந்தனை விதித்திருக்க வேண்டும். மேட்டூர் அணையில் உள்ள தண்ணீர் இன்னும் 10நாட்களுக்குதான்பயன்படும்.

சேலத்தில் அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர்கூறியதாவது: ஒவ்வொரு ஆண்டும் காவிரி நதிநீர் பங்கீடு பிரச்சினை தொடர்கிறது. உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்ப



டையில் உரிய தண்ணீரை மாதந்தோறும் வழங்க வேண்டும். நீர் திறந்தால்தான்கூட்டத்தில் பங்கேற்பேன் என முதலமைச்சர் நிபந்தனை விதித்திருக்க வேண்டும். விவசாயிகள், மக்கள் குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு அக்கறை இல்லை. மேட்டூர் அணையில் உள்ள தண்ணீர் இன்னும் 10 நாட்களுக்கு தான் பயன்படும். குறிப்பிட்ட காலம் வரை அணையில் இருந்து சரியான முறையில் தண்ணீர் திறக்க வேண்டும். காவிரி நீர் பங்கீடு விவகாரத்தில் கர்நாடக அரசு தொடர்ந்து தமிழக அரசை வஞ்சிக்கிறது. நாங்குநேரி சம்பவம் மிகவும் வேதனைஅளிக்கிறது. பள்ளி வளாகத்தில் மாணவர்கள்சாதி சண்டை போடுவது வருத்தம் அளிக்கிறது. எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் ஏற்படாமல் தவிர்க்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# கீழ்பவானி வாய்க்கால் புனரமைப்பு பணிகள் அமைச்சர் நேரில் பார்வையிட்டு ஆய்வு

ஈரோடு, ஆக. 13

ஈரோடு மாவட்டம் நம்பியூர்வட்டத்திற்குட்பட்ட கூடக்கரை மற்றம் எலத்தூர் செட்டிபாளையம் ஆகிய பகுதிகளில் கீழ்பவானி திட்டத்தின் கீழ் வாய்க்கால் பகுதிகள் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதை கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா முன்னிலையில், வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு, ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு. முத்துசாமி நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது அமைச்சர் முத்துசாமி தெரிவித்ததாவது: பவானிசாகர் அணையில் இருந்து கீழ்பவானி திட்ட பிரதானக் கால்வாய் இரட்டைப்படை மதகுகள் மற்றும் சென்ன சமுத்திரம் பகிர்மானக் கால்வாய் ஒற்றைப்படை



மதகுகள் பாசனத்திற்காக வருகின்ற 15ந் தேதி தண்ணீர் திறந்து விட உத்தர விட்டுள்ளார்கள். அதனைத் தொடர்ந்து கீழ்பவானி வாய்க்கால் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்பு பணிகளை தற்போது ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. புனரமைப்பு பணிகளில் 2 இடங்களில் மட்டும் பணிகளை வேகப்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது. அந்த பணிகளும் தற்போது வேகமாக நடைபெற்று வருகிறது. அதேப்போன்று பெரும்பாலான இடங்களில் புனரமைப்பு பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளது. ஒரு சில இடங்களில் நடைபெற்று வரும் பணிகளும் ஒன்று அல்லது 2 நாட்களுக்குள் முடிக்கப்படும். மேலும் வாய்க்கால் சுத்தம் செய்யும் பணிகளும் தொடர்ந்து நடைபெறும். மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்பு பணிகளை தொடர்புடைய அலுவலர்கள் தொடர்ந்து ஆய்வு மேற்கொண்டு வருகின்றார்கள். அதே போன்று அத்திக்கடவு அவிநாசி திட்டப்பணிகளும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. அந்த பணிகளும் விரைவாக முடிக்கப்படும். இவ்வாறு அவர் தெரிவித்தார். இந்த ஆய்வின்போது கண்காணிப்பு பொறியாளர் மன்மதன், கீழ்பவானி வடிநில கோட்ட செயற்பொறியளார் அருள் அழகன், நம்பியூர் பேரூராட்சி தலைவர் செந்தில்குமார், நம்பியூர் தாசில்தார் மாலதி, அரசு அலுவலர்கள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் உள்பட பலர் உடன் இருந்தனர்.

# மின்கம்பத்தில் வளர்ந்துள்ள மரத்தை அகற்ற வேண்டும்

பூதலூர், ஆக. 13

பூதலூர் அருகே உள்ள பூதராயநல்லூர் கிராமத்தில் வயல்வெளிகளில் இரும்பு கம்பங்கள் நட்டு மின்சாரம் கொண்டு வரப்படுகிறது. 30 அடி உயரமுள்ள மின்கம்பத்தில் அடியில் இருந்து 6 உயரத்திற்கு சிறிய அளவிலான மற்றொரு இரும்பு கம்பம் நடப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு வரிசையாக நடப்பட்டுள்ள மின் கம்பங்களில் ஒன்றில் பெரிய மின்கம்பத்துக்கும்அதற்கு பாதுகாப்பாக அமைக்கப்பட்டுள்ள சிறிய மின் கம்



பத்திற்கு இடையில் மரம் ஒன்று முளைத்து கிளை விட்டு உயர்ந்து வளர்ந்து நிற்கிறது. இந்த மின்கம்பம் அமைந்துள்ள வயல் தற்போது தரிசாக காணப்படுகிறது. இன்னும் ஓரிரு வாரங்களில் வயலில் தண்ணீர் பாய்ச்சி விவசாய பணிகள் தொடங்கிவிடும். அப்போது இதில் வளர்ந்துள்ள மரம் மேலே உள்ள மின்சாரக் கம்பியை தொடுவதற்கு வாய்ப்பு உள்ளது. இதனால் இந்த மின்சார வயர்களின் வழியாக செல்லும் கிராம ங்களில் மின்தடைஏற்படுவதற்கும் வாய்ப்பு உள்ளது. எனவே பூதராய நல்லூர் கிராமத்தின் அருகில் வயல்வெளியில் உள்ள மின்சாரக் கம்பத்தில் வளர்ந்துள்ள மரத்தை அகற்றி சீரான மின்விநியோகத்திற்கும் எதிர்காலத்தில் மின் பாதிப்புகளில் இருந்து காத்துக் கொள்ளவும் வழி செய்ய வேண்டும் என்று விவசாயிகள். சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தோவாளையில் அ.தி.மு.க. நிர்வாகிகள் யானை மீது அமர்ந்து நூதன பிரசாரம்

கன்னியாகுமரி, ஆக. 13

அ.தி.மு.க. பொன் விழா மாநாடு மதுரையில் வருகிற 20ந்தேதி நடைபெற உள்ளது. அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் நடைபெறும் மாநாட்டில் கட்சி நிர்வாகிகள் மட்டுமின்றி பெருந்திரளாக பொதுமக்கள் கலந்து கொள்ள வேண்டி முன்னாள் அமைச்சர் தளவாய்சுந்தரம் எம்.எல்.ஏ. அறிவுரையின்படி குமரி மாவட்ட அ.தி. மு.க.வினர் பொதுமக்



களை சந்தித்து வருகிறார்கள். இந்த நிலையில் தோவாளையில் ஆரல்வாய்மொழி பேரூராட்சி மன்ற தலைவர் முத்துக்குமார், மாவட்ட இணை செயலாளரும் தோவாளை ஊராட்சி ஒன்றிய தலைவருமான சாந்தினி பகவதியப்பன் ஆகியோர் கட்சி நிர்வாகிகளுடன் அலங்கரிக்கப்பட்ட யானைமீது அமர்ந்து மாநாடு குறித்த அழைப்புகளை கையில் வைத்து கொண்டு வீதி வீதியாக மக்களை அழைக்கும் விதமாக பிரசாரம் மேற்கொண்டனர். யானையின் மீது அமர்ந்து நூதன பிரசாரம் நடத்திய அ.தி.மு.க. நிர்வாகிகளை பொது மக்கள் வியப்புடன் பார்த்தனர்.

# சத்துவாச்சாரியில் ஏல சீட்டு நடத்தி மோசடி

வேலூர், ஆக. 13

போலீஸ் நிலையத்தை பொதுமக்கள் முற்றுகை ஏராளமானவர்கள் சீட்டுப்பணம் செலுத்தி ஏமாற்றம்

வேலூர் சத்துவாச்சாரி கெங்கையம்மன் கோவில் அருகே ஒருவர் ஏலச்சீட்டு நடத்தி வந்துள்ளார். அவரிடம் பல ஆண்டுகளாக அதேப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள் பலர் பணம் செலுத்தி வந்துள்ளனர். ஒவ் வொருவரும் ரூ.1 லட்சம் முதல் ரூ.5 லட்சம் வரை பல்வேறு சீட்டுகளில் பணம் செலுத்தி வந்தனர். முதிர்வு காலம் முடிந்த பின்னரும் அவர்களுக்கு பணத்தை அந்த நபர் செலுத்த வில்லை என்று கூறப்படு கிறது. இந்த நிலையில் அந்த நபர் மற்றும் இதில் தொடர்புடைய அவரது குடும்பத்தினர் திடீரென தலைமறைவாகி விட்டனர். இதனால் அதிர்ச்சி அடைந்த பொதுமக்கள் நேற்று சத்துவாச்சாரி போலீஸ் நிலையத்தை முற்றுகையிட்டனர். அவர்களிடம் போலீசார் அப்போது அவர்கள் கூறுகையில்: ஏலச் சீட்டு நடத்தி பலலட்சம் ரூபாய்



மோசடி செய்துள்ள நபரிடம் ஏராளமானவர்கள் சீட்டுப்பணம் செலுத்தி ஏமாற்றம் அடைந்துள்ளனர். தலைமறைவாகிய அவரைபிடித்து எங்களது பணத்தை மீட்டுத்தர வேண்டும் என்றனர். இது தொடர்பாக பொது மக்கள் புகார் அளித்தனர். போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தண்டனைகள் மட்டும் பட்டியலினத்தவர் மீதான வெறுப்பு மனநிலையை மாற்றாது அறிவு



சின்னத்துரை, அவருடைய தங்கை சந்திரா செல்வி ஆகியோர் அரிவாளால் வெட்டில் படுகாயம் அடைந்தனர். இவர்களை அரசியல் தலைவர்கள் பலர் நேரில் சென்று பார்த்து ஆறுதல் கூறி, நிதி உதவி வழங்கியுள்ளனர்.

நாங்குநேரியில்பிளஸ்2மாணவர்சின்னத்துரை,அவருடைய தங்கை சந்திரா செல்வி ஆகியோர் அரிவாளால் வெட்டில் படுகாயம்அடைந்தனர்.இதுதொடர்பாகபிளஸ்2மாணவர்கள் 7 பேர் கைது செய்யப்பட்டனர். அரிவாள் வெட்டில் காயமடைந்து பாளையங்கோட்டை ஐகிரவுண்டு அரசு ஆஸ்பத்திரியில்சிகிச்சைபெறும்சின்னத்துரை,சந்திராசெல்வி ஆகியோரை அரசியல் தலைவர்கள் பலர் நேரில் சென்று பார்த்து ஆறுதல் கூறி, நிதி உதவி வழங்கியுள்ளனர். இந்த தாக்குதல் தொடர்பாக 9 பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்நிலையில், பாடகர் தெருக்குரல் அறிவு இந்த சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்து சமூக வலைதளத்தில் பதிவு ஒன்றை பகிர்ந்துள்ளார். அதில், "சாதியற்ற வருங்காலத்தை உருவாக்க, physics chemistry maths எல்லாத்தையும் போல, வகுப்பறைகளில் சாதியத்தின் சமூக விளைவை பாடமா சொல்லிக்கொடுங்க! Anti Caste மனநிலை மாணவப்பருவத்திலேயே எல்லாருக்கும் கற்பிக்கப்படனும். தெருக்குரல் அறிவு பதிவு இடஒதுக்கீடு ஒரு இலவசம் , ஆண்ட பெருமைகள் , சாதி அடையாள கயிறுகள், குறியீடுகள் போன்ற தவறான புரிதல்களை அரும்பிலேயே கிள்ளி எறிவது தான் சமகால கல்வியின் பிரதான நோக்கமா இருக்கணும்.சாதிய வன்கொடுமைகளில் யாருடைய ரத்தம் காலகாலமாக சிந்திக்கிடக்கிறது என விவாதிக்காமல் , எல்லா ரத்தமும் சிவப்பு என்றும் சாதியை ஒரு ஆபத்தில்லாத பண்பாட்டு வடிவம் என்றும் , இருந்தும் இல்லாத ஒன்று என கடந்து போவதும் மேலும் ஆபத்தை வருவிக்கும் ! சக மாணவன் படிப்பதையும் சுயமுன்னேற்றம் அடைவதையும் கூட ஏற்க முடியாத மனநோயின் வேரை கண்டறிந்து வீழ்த்தாமல், தண்டனைகளும் கண்டனங்களும் மட்டும் பட்டியலினத்தவர் மீதான வெறுப்பு மனநிலையை மாற்றாது" என்று பதிவிட்டுள்ளார்.

## சாதி வெறி மண்ணோடு மண்ணாகட்டும் சமுத்திரகனி ஆதங்கம்



நாங்குநேரிசம்பவம்குறித்துபிரபலஇயக்குநரும்,நடிகருமான சமுத்திரகனி தனது கண்டனத்தை தெரிவித்துள்ளார். அரசியல் தலைவர்கள், சினிமா பிரபலங்கள் என பலரும் தங்களது கண்டனத்தை தெரிவித்து வருகின்றனர்.

நாங்குநேரி பெருந்தெரு பகுதியை சேர்ந்த பிளஸ்2 மாணவர் சின்னத்துரை மற்றும் 9ம் வகுப்பு படித்து வரும் அவரது தங்கை சந்திரா செல்வி ஆகிய இருவரும், சக மாணவர்களால் தாக்கப்பட்டு படுகாயமடைந்தனர். அவர்கள் இருவரும் பாளை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இச்சம்பவத்திற்கு அரசியல் தலைவர்கள், சினிமா பிரபலங்கள் என பலரும் தங்களது கண்டனத்தை தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில் பிரபல இயக்குநரும், நடிகருமான சமுத்திரகனி தனது கண்டனத்தை தெரிவித்துள்ளார். சாதி வெறி மண்ணோடு மண்ணாகட்டும் என்ற வரியுடன் புகைப்படம் ஒன்றையும் தனது சமூக வலைதளப் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.


# ஆறு தசாப்தங்களின் ஒப்பற்ற பேரரசர் கமல்ஹாசனுக்கு ஸ்ருதிஹாசன் வாழ்த்து



நடிகர் கமல்ஹாசன் திரைத்துறையில் 64வது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறார். இவருக்கு பலரும் தங்களது வாழ்த்துகளை தெரிவித்து வருகின்றனர்.

நடிகர், பாடகர், தயாரிப்பாளர் என பன்முகத் தன்மைக் கொண்ட நடிகர் கமல்ஹாசன்தமிழ்திரையுலகில்தவிர்க்க முடியாத நடிகராக வலம் வருகிறார். 1960ஆம் ஆண்டு வெளியான 'களத்தூர் கண்ணம்மா' திரைப்படத்தின் மூலம் தமிழ் சினிமாவிற்கு குழந்தை நட்சத்திரமாக அறிமுகமான நடிகர் கமல்ஹாசன் குழந்தை நட்சத்திரத்திற்கான தேசிய விருதினை வென்றார். தொடர்ந்து, பார்த்தால் பசி தீரும், பாத காணிக்கை, வானம்பாடி, ஆனந்த ஜோதி, போன்ற பல திரைப்படங்களில் குழந்தை நட்சத்திரமாக நடித்திருந்தார். பிறகு அபூர்வ சகோதரர்கள், நாயகன், தேவர் மகன், இந்தியன், விக்ரம் என 100க்கும் மேற்பட்ட படங்களில் நடித்து தலைமுறை தாண்டி ரசிகர்களை கவர்ந்து வருகிறார். தேசிய விருது, பத்ம ஸ்ரீ விருது, கலைமாமணி விருது என பல விருதுகளை குவித்துள்ள நடிகர் கமல்ஹாசன் திரையுலகில் அறிமுகமாகி 64 வருடங்கள் நிறைவுபெற்றுள்ளது. இதனை இவரது ரசிகர்கள் கொண்டாடி வருகின்றனர். இந்நிலையில், நடிகர் கமல்ஹாசனுக்கு வாழ்த்து தெரிவித்து அவரது மகள் ஸ்ருதிஹாசன் பதிவு ஒன்றை பகிர்ந்துள்ளார். அதில், "ஏற்ற இறக்கங்கள், சவால்கள் அனைத்தையும் அவர் சந்தித்தார். ஆனால் எதுவும் உலக நாயகனையும் திரைத்துறையை உயர்த்த அவர் எடுக்கும் முயற்சியையும் நிறுத்தவில்லை. ஆறு தசாப்தங்களின் ஒப்பற்ற பேரரசர், தற்போது சினிமாவில் தன்னுடைய 64 வது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறார்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

# ஒரே நாளில் பார்வையாளர்களை குவித்த சந்திரமுகி 2 பாடல்



பி.வாசு இயக்கத்தில் உருவாகியுள்ள திரைப்படம் 'சந்திரமுகி 2'. இப்படத்தின் முதல் பாடல் நேற்று வெளியானது.

இயக்குனர் பி.வாசு இயக்கத்தில் பிரமாண்டமாக உருவாகி வரும் திரைப்படம் 'சந்திரமுகி 2'. இப்படத்தில் ராகவா லாரன்ஸ் கதாநாயகனாக நடித்துள்ளார். கங்கனா ரனாவத் முக்கியகதாப்பாத்திரத்தில்நடித்துள்ளார். மேலும்வடிவேலு, ராதிகா உள்ளிட்ட பல திரைப்பிரபலங்கள் இதில் நடித்திருக்கின்றனர். லைகா நிறுவனம் தயாரித்துள்ள இப்படத்திற்கு எம்.எம் கீரவாணி இசையமைத்துள்ளார். 'சந்திரமுகி 2' திரைப்படம் தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி, கன்னடம் ஆகிய மொழிகளில் விநாயகர் சதுர்த்தி அன்று வெளியாகவுள்ளது. சமீபத்தில் லாரன்ஸ் மற்றும் கங்கனா ரனாவத்தின் ஃபர்ஸ்ட்லுக் போஸ்டர் வெளியானது. சந்திரமுகி 2 போஸ்டர் இதையடுத்து இப்படத்தின் முதல் பாடலான 'ஸ்வாகதாஞ்சலி' பாடல் நேற்று வெளியாகி ட்ரெண்டானது. இந்நிலையில், இந்த பாடல் ஒரே நாளில் 3 மில்லியன் பார்வையாளர்களை கவர்ந்துள்ளது. இதனை படக்குழு போஸ்டர் ஒன்றை பகிர்ந்து தெரிவித்துள்ளனர்.

## பிரபல நடிகரின் மகளை திருமணம் செய்யும் அசோக் செல்வன்



தமிழில் சூதுகவ்வும் படத்தில் அறிமுகமாகி வித்தியாசமான கதைகளில் நடித்து வரும் அசோக் செல்வனுக்கு 'ஓ மை கடவுளே' திருப்புமுனை படமாக அமைந்து. இதைத்தொடர்ந்து இவர் நடிப்பில் சமீபத்தில் வெளியான 'போர் தொழில்' திரைப்படம் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது. இந்நிலையில், நடிகர் அசோக் செல்வன் பிரபல நடிகையை காதலித்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது. அதாவது, அசோக்செல்வன், நடிகர்அருண்பாண்டியனின்மகள்கீர்த்தி பாண்டியனை காதலித்து வருவதாகவும் இவர்கள் திருமணம் செப்டம்பர் 13ஆம் தேதி நெல்லையில் நடைபெறவுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதற்கு முன்பு ஒரு நேர்காணலில் அசோக் செல்வன் வீட்டில் பார்த்து வைக்கும் திருமணம் என் குணத்திற்கு செட்டாகாது என்று கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.




## கனடா ஓபன் டென்னிஸ் 3வது சுற்றில் சபலென்கா அதிர்ச்சி

கனடா ஓபன் டென்னிஸ் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவின் 3வது சுற்று போட்டி நடந்தது. இதில் நம்பர் 2 வீராங்கனையான சபலென்கா அதிர்ச்சிகரமாக தோல்வி அடைந்தார்.

கனடா ஓபன் டென்னிஸ் தொடர் மாண்ட்ரியல் நகரில் நடைபெற்று வருகிறது. இந்த தொடர் ஆகஸ்ட் 13ம் தேதியுடன் முடிவடைய உள்ளது.

பெண்கள் ஒற்றையர் பிரிவின் 3வது சுற்று ஆட்டம் ஒன்றில் 2ம் நிலை வீராங்கனையான பெலாரசின் அரினா சபலென்கா, ரஷியாவின் சாம்சொனோவாவுடன் மோதினார். இதில் சாம்சொனோவா 76 (72), 46, 62 என்ற செட் கணக்கில் வென்று காலிறுதிக்குள் நுழைந்தார்.

முன்னணிவீராங்கனையானசபலென்காஇதில்தோற்றதன்மூலம்தொடரில் இருந்து வெளியேறினார்.




# ஒரு இன்ஸ்டாகிராம் போஸ்டிற்கு 11.45 கோடி ரூபாய்! விராட் கோலியின் பதில் என்ன?

இன்ஸ்டாகிராம் சமூக வலைதளத்தை உலகம் முழுவதும் 235 கோடி பேர் பயன்படுத்துகிறார்கள். அதில் பிரபலங்களை கோடிக்கணக்கானோர் பின் தொடர்கிறார்கள். பிரபலங்களின் கணக்குகளில் விளம்பர பதிவை வெளியிட நிறுவனங்கள் விரும்புகின்றன. இதற்காக அவர்களுக்கு நிறுவனங்கள் கட்டணம் வழங்குகின்றன. இந்த நிலையில் இன்ஸ்டாகிராம் தளத்தில் விளம்பர பதிவுகள் ஈட்டும் முதல் 100 பிரபலங்கள் பட்டியலை இங்கிலாந்தின் ஹாப்பர் எச்.கியூ. நிறுவனம் வெளியிட்டது. முதலிடத்தில் போர்ச்சுக்கல் கால்பந்து வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ உள்ளார். அவர் ஒரு பதிவுக்கு ரூ. 26.78 கோடி பெறுகிறார். அவரை 60 கோடி பயனர்கள் பின் தொடர்ந்து வருகிறார்கள். 2வது இடத்தில் அர்ஜென்டினா கால்பந்து வீரர் மெஸ்சி (ரூ.21.15 கோடி) உள்ளார். இன்ஸ்டாகிராமில் அதிக வருமானம் ஈட்டும் இந்தியராக கிரிக்கெட் வீரர் விராட் கோலி உள்ளார். அவர் ஒரு பதிவுக்கு ரூ.11.45 கோடி வருமானம் ஈட்டுகிறார். அவர் மொத்த பட்டியலில் விராட் கோலி 14வது இடத்தில் உள்ளார். விளையாட்டு வீரர்கள் பட்டியலில் 3வது இடத்தில் உள்ளார். விராட் கோலியை 25.60 கோடி பேர் பின் தொடருகிறார்கள். பிரேசில் கால்பந்து வீரர் நெய்மர் (ரூ.9.45 கோடி) ஒட்டுமொத்த பட்டியலில் 19வது இடத்திலும், விளையாட்டு வீரர்கள் பட்டியலில் 4வது இடத்திலும் உள்ளார். முதல் 100 பிரபலங்கள் பட்டியலில் விராட் கோலி, நடிகை பிரியங்கா சோப்ரா, இன்ஸ்டாகிராம் பிரபலம் ரியாஸ் அலி ஆகிய மூன்று இந்தியர்கள் இடம்பெற்றுள்ளனர். பிரியங்கா சோப்ரா ஒரு பதிவுக்கு ரூ.4.4 கோடி வருமானம் ஈட்டி 29வது இடத்தில் உள்ளார். இந்த தகவலை பார்த்து, விராட் கோலி இவ்வளவு தொகை பெறுகிறாரா...! என ரசிகர்கள் வாயடைத்து போனர். ஆனால், இந்த தகவல் குறித்து விராட் கோலி டுவிட்டரில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில், ''நான் பெறும் அனைத்திற்கும் நன்றியுள்ளவனாகவும், கடமைப்பட்டுள்ளவனாகவும்இருக்கும்போது,சமூகவலைத்தளங்கள்மூலம்நாம்பெறும்வருமானம்குறித்துபரவிவரும்செய்திஉண்மையல்ல''எனக்குறிப்பிட்டுள்ளார். என்றாலும், விளம்பரங்கள் மூலம் கோடிக்கணக்கில் வருமானம் ஈட்டி வருவது உண்மை என்பதில் சந்தேகம் இருக்கமுடியாது.




## வெஸ்ட் இண்டீசுக்கு எதிரான 4வது டி20 போட்டி தொடரை சமன் செய்யுமா இந்தியா?

3 போட்டிகள் முடிந்துள்ள நிலையில் வெஸ்ட் இண்டீஸ் அணி 21 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது. இந்தியா, வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கு இடையிலான 4வது டி20 போட்டி இன்று நடைபெறுகிறது.

இந்திய கிரிக்கெட் அணி வெஸ்ட் இண்டீசில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் பங்கேற்று ஆடி வருகிறது. இதுவரை 3 போட்டிகள் நிறைவடைந்த நிலையில் வெஸ்ட் இண்டீஸ் அணி 21 என்ற கணக்கில் தொடரில் முன்னிலை பெற்றுள்ளது. முதல் இரண்டு போட்டிகளில் வெஸ்ட் இண்டீசும், 3வது போட்டியில் இந்தியாவும் வெற்றி பெற்றன. இந்நிலையில் இவ்விரு அணிகள் இடையிலான 4வது டி20 போட்டி அமெரிக்காவில் இன்று நடைபெற உள்ளது.

இந்திய நேரப்படி ஆட்டம் இரவு 8 மணிக்கு தொடங்குகிறது. அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் உள்ள சென்ட்ரல் புரோவர்ட் ரீஜினல் பார்க் ஸ்டேடியம் டர்ப் மைதானத்தில் இந்த ஆட்டம் நடைபெறுகிறது. இந்த ஆட்டத்தில் வெற்றி பெற்று தொடரை கைப்பற்றும் முனைப்புடன் வெஸ்ட் இண்டீஸ் அணியும், தொடரை இழக்கக்கூடாது என்பதற்காக இந்திய அணியும் தங்களது சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவர் அதனால் ஆட்டத்தில் பரபரப்புக்கு பஞ்சம் இருக்காது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.